494

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. V] SEPTEMBER 1923 [No. 9

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

Annual Subscription Inland Rs. 1—8
" " Foreign Rs. 2—0

IV. Volume (1922) with beautiful half—tone illustrations

Gold Gilt Calico bind Rs. 2 0 0

18 JAN 192

All Rights reserved by the Publishers.

Vol. V. தொகுதி 5.	1923ளு செப்டெம்பர்மீ	No. 9. பகுதி 9.

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	257
ஹிதோபதேசம்	258
கற்பின் மகத்வம்	259
மாதராடவர் ஒழுக்கம்	265
ஹாஸ்யம்	268
பூர்விக அரசு	269
சிறுத்தொண்டர் 201-ம் பக்கத் தொடர்ச்சி	273
வித்வத் சாமர்த்திய வசனம்	278
நற்குணமுள்ள பையன்	279
ஹாஸ்யம்	287

சித்திரப் படங்கள்.

1. நளாயினியின் கற்பின் மகத்வம்
2. சிறுத்தொண்டர் சிவனடியாரை உபசரித்தல்

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனல் ஒப்புக்கொள்ளப் பட மாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 5 | 1923ஷு செப்டம்பர்மீ | பகுதி 9

தெய்வ வணக்கம்.

உககோடி முடிவின் மண்டிய சண்டமாருத
முதித்ததென் றயனஞ்சவே
ஒருகோடி யண்டாண் டங்களும் பாதாள
லோகமும் பொற் குவடுறும்
வெருகோடி மலைகளு மடியினிறகர்ந்திரு
விசும்பிற் பறக்கவிரிநீர்
வேலை சுவறச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்குமயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்ததா
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் ஸ்ரீதரன் தேவகி
நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகோடியநவரத
முகிலுலவு நீலகிரிவாழ்
முருகனுமை குமரனறு முகனடவு விகடதட
மூரிக்கலாப மயிலே

அருணகிரிநாதர் அருள் வாக்கு

ஹிதோபதேசம்.

1. "காகமுட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்தது" என்பதுபோல் ஒருவன் தெய்வச் செயலாய்ப் புதையலைக் காணலாம். ஆனால் அதனைத் தெய்வமே எடுத்துக் கொடுக்குமா? எடுத்துக் கொடாது. தெய்வம் காட்டுமே ஒழிய ஊட்டாது. ஆதலின் அதை உன் முயற்சியினாலே நீ பெறவேண்டும்.

2. ஒவ்வொருவரும் முயற்சியோடிருத்த லவசியம். முயற்சியின்றி ஒன்றும் கைகூடாது. சிங்கம் மிருகராஜன்தான்; ஆயினும் அது தன் குகையிலே தூங்கிக்கொண்டிருந்தால் அதன் வாயில் (யானை முதலிய மிருகங்கள்) இரை வந்து புகுமா? ஒரு காலும் புகாது. ஆதலின் முயற்சி இன்றியமையாதது.

3. ஸூரியோதம், அன்புள்ள தந்தை, தாம்பூலம், பாரதக்கதை, அன்புள்ள மனைவி, உண்மை நண்பன் இவர்களை எத்தனைமுறை கண்டு மகிழ்ந்தாலும் தினம் தினம் புதிதாகவே இன்பமளிப்பவர்களா யிருப்பார்கள்-அதிசயம்!

விடுகதைகள்.

1. எங்களப்பன் சொரியன்-எங்களாத்தாள் சடைச்சி-நான் சக்கரைக்குட்டி-இது என்ன?

2, ஒரு கரண்டி மாவிலே ஊரெல்லாம் கல்யாணம்? இது என்ன?

சென்னை-600 008

கற்பின் மகத்வம்.

ஆத்திசூடி என்கிற அழகிய சிறு நூலில் நமக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்தருளியவர் ஔவையார் என்கிற ஞானத்தாயார். இவர்களுடைய மகிமைபெரிது. இவர்கள் சமயத்துக்குத்தக்கபடி அநேக தனிக்கவிகள்பாடி மக்களுக்குவேண்டிய போதனைகளைச் செய்திருக்கின்றார்கள். அவைகளை*ஔவை அருந்தமிழ் என்கிற நூலிலே விரிவாய்க்காணலாம்.

இவர்கள் இன்பம் எது என்று கூறவந்தபோது

"ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு—

184332

என்றுபாடி விளக்கியருளினார்.

இந்தக் கவியில், காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே இன்பம் என்று கூறிவிட்டபடியால், நாயகனும் நாயகியும் மனமொருமித்து வாழ்வதே இன்பம் என்று நாமறியலானோம். அவர்கள் மாறுபடுவார்களா

---

* ஔவை அருந்தமிழ் விலை அணா 12.
வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி இயற்றியது.

னால் உலகவாழ்வில் அளவற்ற துன்பமுண்டாம். நாயகன் நாயகியை வெறுப்பான். நாயகி நாயகனை வெறுப்பாள். எப்போதும் வீட்டில் சண்டை சச்சரவேயிருந்திருக்கும். இருவரில் யாரேனும் ஒருவர் மனம்பொறுத்துப் போவாரானால் ஒருவாறு வாழ்வு இனிதாய் நடைபெறும். நாயகி கெட்ட சுபாவமுடையவளாயிருந்து நாயகன் அவளை அநுஸரித்து நடப்பானானால் இருவரும் கொடிய பாபத்திற்காளாய் நரகத்திற்குப் பாத்திரர்களாக நேரிடும். நாயகன் கெட்ட நடவடிக்கையுடையவனாயிருந்து அவனை நாயகி அநுஸரிப்பாளானால் நாயகிக்கு அதனால் பாபமொன்றுமே நேராது. கணவன் எப்படியிருந்தாலும் நாயகி அவனைப் பழிக்காமல் அவனை அநுஸரித்தே நடக்கவேண்டுமென்பது பதிவிரதாதர்மம். மேலும் நாயகன் செய்யும் புண்ணிய கர்மங்களில் நாயகிக்குப் பாத்தியமுண்டு என்றும் ஆனால் அவன் செய்யும் பாபகர்மங்களிலே பாத்தியமில்லையென்றும் மநுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. இதனையன்றி நாயகி தன் கற்பைக் காத்து வருவாளானால் நாயகன் எவ்வளவு தீயவனாயிருந்தாலும் அவன் சகல சுகிர்தங்களையுமடைவான் என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் நடத்துவதன் பொருட்டு விராட நகரில் பிரவேசிக்க ஆலோசிக்கையில், தருமபுத்திரர் பாஞ்சாலியைப் பார்த்து,—

"மாதே! **வேதியர் ஒழுக்கமும், வேந்தர் நீதியும் மாதர்கள் கற்பும் பொருந்தியே** மாத **மும்மாரிபெய்கின்றது.** மழையினாலே மாநிலம் தழைக்கிறது. மழையினாலே உலகம் சகல நன்மைகளையும் அடைகின்றது.

இந்த அரிய நன்மைக்குக் காரணமான கற்புடைய மாதை மணந்தவன் விற்பன விவேகங்களை யடைவான்; அன்பும், இன்பமும், அழகும், புகழும், அறிவும், ஆற்றலும், வெற்றியும், செல்வமும், சீரும், சிறப்பும், திடமும், தீரமும் குறைவின்றி அடைவான். ஆதலின் நீ உன் கற்பைக் காப்பாற்றிக்கொள். நாம் சகல சுகிர்தங்களையும் அடையலாம்" என்று புத்திமதி கூறியருளினார்.

ஆகவே நாயகியின் கற்பினால் நாயகன் பாபம் நீங்கி நன்மைபெறுவது கூடுமென்று நாம் அறியலாகும். ஆதலால் நாயகி நாயகனை எவ்வாற்றாலும் அநுஸரித்து நடப்பதே சிறந்ததாம். இதனாலேதான், ஔவையார்,

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி வாழலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்நியாசங் கொள்."

என்று போதித்தார்.

இதனை விளக்கும் கதையொன்றுண்டு. அதனைக் கவனிப்போம்.

பிரதிஷ்டானம் என்னும் ஊரில் கௌசிகன் என்னும் பெயர்கொண்ட ஓர் அந்தணன் இருந்தான். கண்டவர் அருவருக்கத்தக்க கொடிய குஷ்டநோய் அவனுக் குண்டாயிருந்தது. அதனால் அவன் கைகால்களெல்லாம் புண்பட்டு அழுகிச் சுருங்கிப்போயின. அவன் அருகே சென்றால் துர்நாற்றம் சகிக்கமுடியாமல் வீசும்.

இப்படிப்பட்ட கொடிய நோயாளியாகிய அவனுக்கு அவன் செய்த புண்ணிய வசத்தால் குணவதியான

நல்ல மனைவி வாய்த்திருந்தாள். அவள் பெயர் சீளாயனி. அவள் அவனிடம் அருவருப்படையாமல் அவனையேதான் தொழுந்தெய்வமாக எண்ணி நாடோறும் அவனை வெந்நீரில் குளிப்பாட்டி வைப்பாள்; கைகால் கழுவல், கைகால் பிடித்தல், எண்ணெய் பூசுதல், ஆடை யுடுத்துவிடல், வேளை தவறாமல் உண்டியுதவல், அடிக்கடி அவனுடலிலிருந்து பெருகும் உதிரம், சீழ், மூத்திரம், புரீடம் முதலியவற்றைக் கழுவல் முதலியவைகளை வெறுப்பொருசிறிதுமில்லாமல் செய்வாள்; அவனுடன் அன்போடு வார்த்தையாடுவாள்; அவன் சினந்து பேசினாலும் கோபியாமல் பொறுத்திருப்பாள். அவள் இவ்வாறிருப்பதை அவன் மனதிற் சிறிதும் கவனிப்பதில்லை. அடிக்கடி கோபித்துக்கொள்வான்; எரிந்துவிழுவான்; அடிக்கடி அச்சமுறுத்துவான்.

கௌசிகன், நடக்க முடியாதவனா யிருந்தபடியால் அவன் வெளியே போகும்போது அவனை அவன் மனைவி தன் தோளின்மீது தூக்கிக்கொண்டு போவாள். அப்படி அவனை அவள் ஒருசமயம் ஒருநாளிரவில் அவன் விரும்பிய ஓரிடத்திற்குத் தூக்கிக்கொண்டு போனாள். மழைக்காலமாதலால் இருட்டு பயங்கரமாய்ச் சூழ்ந்திருந்தது. மழையும் சிறிது தூறியது. ஆகவே அவள் மின்னல் வெளிச்சத்தைக்கொண்டு வழிகண்டு செல்ல வேண்டியதாயிற்று.

அந்த வழியின் சமீபத்தில் மாண்டவ்வியர் என்னும் ஒரு முனிவரை அரசாங்கத்தார் கழுவிலேற்றியிருந்தார்கள். முனிவர் ஒருகுற்றமும் செய்யாத நிரபராதி. அரசாங்கத்தார் தவறான விசாரணையினால் அவர்மேல்

குற்றம் சுமத்தி அவரைத் தண்டனைக்குள்ளாக்கி விட்டார்கள்.

முனிவர் எதையும் பொறுத்துக்கொள்ளும் இயல்புடையவராதலால், "வருவதையாரால் விலக்க முடியும், வருவது வந்தேதீரும்" என்றெண்ணித் தண்டனையை ஏற்றுக்கொண்டார். அவ்வாறு தண்டனைக்குள்ளாய் வருந்தும் அந்த முனிவர்மீது, மனைவியின்மீது செல்லும் கௌசிகன் அவயவம்பட்டது. படவே அவருடல் அசைந்தது .அதனால் அவர் மிகுந்த வருத்தமடைந்தமையினால்,—"அநியாயமாக இந்த ஆபத்துக்குட்சிக்கி வருந்திக்கிடக்கும்எனக்கு மிகுந்த நோயுண்டாகும்படி என்னை அசைத்தவன் பொழுதுவிடிந்து சூரியனைப் பார்த்ததும் நாசமடையக்கடவன்" என்று சபித்தார்.

முனிவரின் இச்சாபத்தைக்கேட்ட வுடனே, அந்தப் பதிவிரதை, "அங்ஙனமாயின் சூரியனுதயமாகாதொழிக" என்று சபித்தாள். அவ்வாறே சூரியன் உதயமாகாமற்போகவே உலகத்தில் எல்லோரும் வருந்தினர். உலகமெல்லாம் இருள் சூழ்ந்து பயங்கரமாயிருந்தபடியால் ஜனங்கள் தத்தம் தொழில் கெட்டுத் தடுமாறினர்.

இவ்வாறு சில நாட்கள் செல்லவே, "அந்தோ! இனி உலகம் அழியும்போலும்" என்றெண்ணித் தேவர்கள் பிர்மதேவரிடம்போய் வணங்கி இவ்வாறு நேர்ந்ததன் காரணம் யாதென்றும் இது எப்படித்தீரும் என்றும் வினவினார்கள். பிர்மதேவர்—"தேவர்களே, ஒரு பதிவிரதையினுடைய சாபத்தினாலே இவ்வாறு சூரியனுதியாமலிருக்கிறது. முன்போல் சூரியனுதிக்க வேண்டுமாயின் நீங்களெல்லோரும் அத்திரி முனிவரின்

மனைவியும் கற்பிற் சிறந்தவளுமாகிய அனுசூயையி னிடம் சென்று வழிபட்டுப் பிரார்த்திப்பீர்களானால் இதற் கோர் வழியேற்படும்" என்று சொல்லியனுப்பினர்.

தேவர்கள் அனுசூயா தேவியாரிடம்போய் அந்த அம்மையாரை வணங்கித் தங்கள் குறையைக்கூறிக்கொண் டனர். அனுசூயை அம்மையார் மகாபதிவிரதை! தேவர் கள் வந்து வணங்கினரென்றால் அவர் பெருமையை அள விடுவதற்காகுமா? அந்த அம்மையார் தேவர்களை நோ க்கி, "நீங்கள் கவலைப்படவேண்டாம். கற்புடையமாதின் பெருமையும் கெடுவதாகாது. முன்போல் இரவும்பகலும் உண்டாதல் வேண்டும். அக்கற்புடைய மாதின் கண வனும் உயிர்பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் செய் கிறேன்" என்று கூறித்தேவர்களை அனுப்பிவிட்டு நேரே நளாயனியின் வீட்டுக்குவந்தார்.

அனுசூயை அம்மையாரைக் கண்டதும் நளாயனி பரமானந்தத்துடன் வணங்கி உபசரித்து வரவேற் றாள். அனுசூயையார், அவளை ஆசீர்வதித்து, "நீயும் உன் கணவனும் சௌக்கியமா? உன் தர்மம் சரிவர நடந்து வருகின்றதா? மாதே, உன் கணவனுடைய முகத்தைக் கண்ட மாத்திரத்தில் நீ சந்தோஷப்படுகின்றாயா? எல் லோரையும்விட நீ உன் புருஷனை மேலானவனாகக்கொள் கின்றாயா? நான் ஏன் இப்படிக் கேட்கின்றேனென்றால் மாதர்களுக்குக் கற்பொன்றினாலே எல்லா மேன்மையும் உண்டாதல் வேண்டும். என் நாதனை நான் பூஜித்து வரு கின்றபடியால் நான் பெரும்பயனை அடைந்து வருகி றேன். மாதர் தங்களுடைய தர்மத்தை நன்றாய்த் தெரி ந்துகொண்டு நடக்கவேண்டும்" என்றார்.

கௌசிகன் மனைவி வணங்கி, "தாயே! அந்த தர்மம் என்ன?" என்று கேட்டாள். அனுசூயை கூறுகின்றாள்—

மாதராடவர் ஒழுக்கம்

மானிடன் தன் வருணாசிரமதருமத்துக்கு விரோதமில்லாமல்பொருளைத்தேடவேண்டும். தேடியபொருளைத் தக்கவழியிலே செலவழிக்க வேண்டும். என்றும் ஸத்தியமே பேசவேண்டும். தவம், கொடை, அருள் இவற்றுடன் கூடியவனாயிருத்தல் வேண்டும். நாடோறும் புண்ணியகருமத்தையே செய்யவேண்டும். இவ்வாறு அறநெறி தவறாமல் நடக்கும் ஆடவன் புண்ய உலகத்தை அடைவான். பிறகு அவன் தன்னுடைய பெரு முயற்சியினால் பிர்மலோகம் முதலியவைகளைப் பெறுவான்.

இவ்வாறு வெகு கஷ்டப்பட்டுத் தேடிய எல்லா தருமங்களிலும் அரைப்பங்குப் பயனை அந்த ஆடவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனைப் பூசித்துவரும் மனைவி அடைவாள். புருஷனுக்கு அவன் செய்யும் தருமங்களுக்குத் துணையாயிருப்பதைத் தவிர மாதர்களுக்கு வேறு விரதங்கள் கிடையா. நாயகனைக் காப்பாற்றவேண்டும் என்கிற எண்ணம் ஒன்றாலேயே மாதர்கள் தாம் இச்சித்த உலகத்தை அடைகின்றனர். ஆதலாலேதான் கணவனை வழிபடுவதைப்பற்றி உனக்கு ஞாபகஞ் செய்தேன். உனக்கு மேலானகதி உன் நாயகன்றான். அவனிடமே உன்மனம் எப்பொழுதும் சார்ந்திருத்தல் வேண்டும்—என்றாள்.

இதைக் கேட்டதும் கௌசிகன் மனைவி அனுசூயை அம்மையாரை அன்போடு பார்த்து "என்னம்மா! எனக்

குச் சிறிதுண்டாயிருந்த பதிபக்தியைத் தாங்கள் விளக்கினீர்கள். சந்தோஷம். தேவரீர் கூறியவற்றை யானும் அறிவேன். மாதர்களுக்குக் கணவனை ஒத்த நல்லகதி வேறொன்றுமில்லை. கணவனுடைய பரிபூர்ண மான அன்பைப் பெறும் மாது உயிரோடு கூடிவாழும் நாளினும் இறந்தொழிந்த நாளினும் சுகமே பெறு வாள். ஆதலால் மாதர்க்குக் கணவனே பெரிய தெய் வம். அறிந்து கொண்டேன். கற்பிற்கரசாக விளங் கும் தாம் இந்த ஏழையின் குடிசையை நாடிவந்ததன் நோக்கம் யாதோ?—என்று கேட்டாள்.

அநசூயை யம்மையார் "அம்மணி, உன் சாபத் தால் சூரியன் உதியாம லிருக்கிறதல்லவா? அதனால் உலகமெல்லாம் வருந்துகிறது. தேவர்கள் என்னிடம் குறை கூறிக் கொண்டனர். பகலே இல்லாதொழி வதால் யாவர்க்கும் ஒருதொழிலும் செய்ய முடி யாமலிருக்கிறது. சூரியன் காணுதொழிவதால் இனி மழையுமில்லாமற் போகும். மழையில்லாமற் போனால் உலகம்பிழைக்குமா? உன்னுடைய சொல்லால் உலகமே பாழ்படுகின்றது. உலகமனைத்திற்கும் இப்போது நேரிட் டிருக்கும் பேரிடரை ஒழிக்கவேண்டு மென்கிற கருணை உனக்கிருக்குமானால் முன்போல் சூரியோதய மாகும்படி அநுக்கிரகஞ் செய்" என்றார்.

இதைக் கேட்டதும் கௌசிகன் மனைவி "மாண்டவ்ய ரின் சாபத்தை நீர் கவனித்தீரா? அவர் சாபப்படி, சூரி யோதயமானால் என் கணவன் இறந்துவிடுவார். இதற் கென்னசெய்வது?" என்று கேட்டாள்.

அநசூயை அம்மையார் 'நீ கவலைப் படாதே! நான் உன் கணவனை இச்சாபத்லிருந்து காப்பாற்றுகி றேன். நான் கற்புடைய மாதரின் பெரும்புகழை யும் மகிமையையும் சிறப்படையும்படிசெய்ய எப்போதும் முயல்வேன. ஆதலால் நான் சொல்வதற்கு நீ சற்று இணங்கவேண்டுகிறேன்" என்று சொன்னார்.

கௌசிகன் மனைவி, "நல்லது! தமது சித்தம்

என் பாக்கியம்" என்றார். அநுசூயை யம்மையார், சந்தோஷத்துடன் தன் கரத்தில் ஜலத்தையள்ளி, சூரிய பகவானைச் சிந்தித்து வரவேண்டினள். உடனே சூரியன் உதயகிரியிலே தோன்றினன். அக்கணமே கௌசிகன் உயிர்போயிற்று. அவன் நிலத்திலேவிழுந்தான். விழும்போது அவனுடைய மனைவி ஆ! என்றலறி அவனைத் தாங்கிக் கொண்டாள்.

அநுசூயையார் அவளை நோக்கி, "சௌபாக்கியவதி! நீ வருந்தாதே! என்னுடைய வல்லமையைப்பார். நான் நெடுங்காலமாக என் கணவரைத் தொழுது சிறு தவமுடையவளாயிருக்கிறேன். என்மனமானது என் நாயகரோடு கல்வி, அறிவு, ஒழுக்கம், வடிவு, இயற்கை, சொல்லினிமை, ஆற்றல், தவம், பெருமை, செல்வம் முதலியவற்று ளொன்றிலும் சமமான வேறொரு புருஷன் இருக்கின்றான் என்று காணமலிருப்பது உண்மையானல், இந்த வேதியன் நோய் நீங்கி இளமைபெற்று உயர்த்தெழக்கடவன். எழுந்தபின் நூறு வருஷம் இம் மனைவியோடு பிழைத்திருக்கக்கடவன்!" என்றுகூறினர்.

கூறிய மாத்திரத்தில் கௌசிகன் நோய் நீங்கி இளமைப் பருவந்தாங்கி உயிர்த்தெழுந்தான். ஆச்சர்யம்! ஆச்சர்யம்! என்று தேவர்கள் வியந்து பூமழை பொழிந்தனர். தேவ துந்துபி முழங்கியது. உடனே பிரம தேவர் தேவர்களுடன் பூலோகத்திற்கு வந்து அநுசூயை அம்மையாரை வாழ்த்தி வேண்டிய வரங்களைத் தந்து சென்றனர். கற்பின் மகத்துவத்தைக் கண்டு உலகம் புகழ்ந்தது.

இதனாலேதான் தமிழ்வேதம்—

* "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

என்று கூறியது.

---

* ஒருவன் அடையும் பொருள்களில் மனைவியின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவள் கற்பென்னும் கலங்கா நிலைமை உண்டாகப் பெறின்.

ஹாஸ்யம்.

ஒருவர் தமது மகளுடைய கல்யாணத்துக்கென்று ஒரு பீப்பாய் நிறைய எண்ணெய் வாங்கி அதை மூடி போட்டு மூடிப் பூட்டி முத்திரையிட்டுப் பத்திரப்படுத்தியிருந்தார். இவர் தர்க்கசாஸ்திரபண்டிதர்; பணக்காரர். ஆனல் பிறர்க்கு ஒன்றைக் கொடுக்க மனமில்லாதவர்; ஈவோரையும் ஈயவொட்டார். இவர் சில நாள் பொறுத்துக் கல்யாண சமீபத்தில் இந்தப் பீப்பாயைத் திறந்து பார்த்தார். இதில் எண்ணெய் குறைந்திருந்தது. பணக்காரன் பக்கத்திலேயும் பத்துப்பேர் பைத்தியக்காரன் பக்கத்திலேயும் பத்துப்பேர், என்பது போல் அவன் பக்கத்திலே இப்போது பத்துப்பேரிருந்தனர். அவன் அவர்களைப்பார்த்து, "ஏன் இப்படி எண்ணெய் குறைந்திருக்கிறது; என்ன ஆச்சரியம்!" என்று கூறிவிட்டு உபரிநிமிர்ந்த வண்ணத்திலே ஆலோசித்தார். இப்பொழுது அங்கிருந்தவர்களிலே ஒருவன், இந்தப் பீப்பாய்க்கு அடியிலே துளை பண்ணி யாரேனும் எண்ணெயைக் கொண்டு போயிருக்கக்கூடுமென்றெண்ணுகிறேன் என்ருன். தர்க்கசாஸ்திரி, அவனைப் பார்த்துச் சை, என்று கூறி முகஞ்சுளித்து," என்னடா உளறுகிருய்? பீப்பாய்க்கு அடியிலே எங்கேயடா எண்ணேய் குறைந்திருக்கிறது? மேலே யல்லவா குறைந்திருக்கிறது? இதைக் கவனியாமல் பேசுகிருயே! மூடமே" என்று திருவாய்மலர்ந்து, "எண்ணெய் எப்படிக் குறைந்தது?" என்றபடி தம் தலையைத் தடவிக் கொண்டு தியான சமாதியில் உட்கார்ந்தார்.

பூர்வீக அரசு

இராமாயணம் நடத்தேறிய காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் அரசர்களுக்கும் குடிகளுக்கும் இருந்த ஒற்றுமை நேசம் மெச்சத்தகுந்ததே. அதை நாம் இப்போது கேட்டபோதிலும் நமக்கது பரம சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. அரசன் குடிகளைத் தன் உயிர்போற் கருதித் தான் உடல்போலிருந்து வேண்டியவற்றை ஒழுங்குபெற நடத்திவந்தான். குடிகளும் அரசனைத் தங்களுயிர்போ லெண்ணித் தாங்களுடல்போலிருந்து அரசனுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டி வந்தனர். இதை விவரிக்க இங்கொரு சிறு கதையைக் கவனிப்போமாக.

வேனன் என்னும் பெயரைக் கொண்ட வேந்தனொருவன் இருந்தான். அவன் அங்கராஜன் என்பவனுடைய அருந்தவப் புதல்வன். அரசனானவன் தன்னாலும், தன் சேனையாலும், பகைவராலும், திருடராலும், மிருகங்களாலும் குடிகளுக்கு ஒரு பயமுமில்லாமல் ராஜரீகம் செய்யவேண்டுமென்று தருமசாஸ்திரம் சொல்லுகின்றது. ஆனால் வேனபூபதி மேற்சொன்ன தர்மசாஸ்திரத்துக்கு நேர்விரோதமாக அரசு செய்துவந்தான்; பெரியோர்களுடைய நற்போதனையை அவமதித்து வந்தான். அதனால் குடிகள் மிகவும் வருத்தமடையலானார்கள். இந்த அக்கிரமத்தைக் கண்ட மகரிஷிகள் அந்த மன்னனை எந்தவழியிலுந் திருத்த முடியாதவராய்ச்

சபித்துக் கொன்றார்கள். கொடுங்கோலரசாது பெருமை ஒங்குவதுபோல் தோன்றி உடனே அவர்களுக்குக் குந்த இடமும் குடிக்கக் கூழும் இல்லாமற்போவது உண்மையல்லவா ?

மற்றும் நல்லவர் நேசத்தை விடுதல், அயல் மாதரை விரும்பல், உயிர்களிடம் ஈவு இரக்கம் சிறிதுங் கொள்ளாமை ஆகிய இவைகளே அவர்களுக்குப் பூஷணம். பிரத்தியக்ஷமாகக் கெடுதி நேரிடுவதைக் கண்டாலும் அவர்கள் பெருநெருப்புக்கும் பெயராத மலைப்பாம்புபோலக் குணப்படுவதில்லை. இத்தகையோர் கடவுளின் அல்லது பெரியோர்களின் சொல்லம்புக்கு இலக்காகத்தானே வேண்டும். உளியானது மிருதுவான தளிரின்மீது ஊன்றப் பெற்றாலும், தட்டாமல் இறங்குமா? அதுபோல் இவர்கள் தண்டனை பெறாது வழிக்கு வரமாட்டார்கள்.

"பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரார்
பேரா இடும்பை தரும்."

என்றன்றோ தமிழ்மறை பேசுகின்றது.

இப்படி வேனராஜன் பெரியோர்களுடைய சாபத்துக்குப் பாத்திரனாய்ப் பரலோக மடைந்தபோது அவனுடைய. தாயார் சுநீதா அவனுடலைத் தைலத்தி விட்டு வைத்துப் பாதுகாத்து வந்தாள். புத்திரசோகம் எவரைவிட்டது? அது பெண்மக்களைச் சுளுவில் விட்டொழியுமா? சுநீதா தன் பிள்ளையின்மீது வைத்திருந்த பாசத்தால் வேனனுடைய உடலைப் பாதுகாக்க நேர்ந்தது.

பேணாது-நன்கு மதியாது அவமதித்து, பேரா-எக்காலத்தும் நீங்காத, இடும்பை-துன்பம்.

தாய்மார் பக்ஷம் பாராட்டுவதில் நல்ல பிள்ளையையும் துஷ்ட பிள்ளையையும் சமமாகவே பார்ப்பது சகஜம். வேனனுக்குப் பிறகு உலகம் தக்க அரசனின்றித் தவிக்க நேர்ந்தது. ஆகவே உலக விவகாரங்கள் ஒழுங்குபெற நடைபாடுவது தவறலாயிற்று. பழி பாவங்கள் வரம்பு கடந்து பரவத் தலைப்பட்டன. மகரிஷிகள் ஒன்றுகூடி யோசித்து நாட்டுக்கோ ரரசனை ஏற்படுத்த இஷ்டங் கொண்டார்கள்.

முனிவர்கள் சுநீதா என்பவள் பத்திரப்படுத்தி வைத்திருந்த வேனராஜனுடைய உயிர் நீங்கிய உடலைக் கொண்டுவரச் செய்து அவ்வுடலின் வலக்கையை மந்திர பலத்தால் கடைந்தார்கள். அதனிடமாக ஒரு புருஷன் தோன்றினான். அவன் பிருது என்னும் பேரைப் பெற்று உலகத்துக்குச் சக்கரவர்த்தியாய் அரசு புரியலானான். நற்குணமும் நன்னடக்கையும் இந்தப் பிருது வென்பவனிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. இவனைச் சற்குணசம்பன்னன் என்று யாவரும் புகழத் தொடங்கினர். நேச பாவனை, ஜீவகாருண்யம், பரோபகாரம் ஆகிய பிறவிக் குணங்கள் மூன்றும் இவனிடத்திற் பொருந்தியிருந்தன.

வேனன் செய்து வந்த கொடுமையால் பிரபஞ்சத்தில் அற்ப புல் பூண்டும் தலையெடாமற் போகவே ஜனங்கள் யாவரும் பசிப்பிணியால் மெலிவடைந்து வருந்தி வந்தார்கள். பசிப்பிணியை பகவான் எல்லாப் பிராணிகளுக்கும் ஜீவாதாரமாக ஏற்படுத்தி யிருக்கிறார். அவ் வேற்பாடுதான் ஒருவரை யொருவர் மதிக்கச் செய்கின்றது. மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை [முயற்சி] இல்லறப் பற்று ஆகிய பத்தும் பறந்தோடுவது இப்பசியினாற்றானே. குடிகள் இப்போது பிருது சக்கரவர்த்தியினிடஞ்

சென்று முறையிட்டார்கள் ; தங்கள் மீது கிருபை வைத்துத் தங்களுக்கு நேர்ந்துள்ள பசிப் பிணியைத் தீர்த்தருளுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

குடிகளின் முறைப்பாட்டுக்கு மனந்தளர்ந்த பிருது சக்கரவர்த்தி பூமிதேவியைச் சகல வளங்களுந் தழைத்தோங்கக் கிருபை செய்யும்படி வந்தன பூர்வமாகப் பிரார்த்தித்தான். பிரார்த்தனை பயன்படவில்லை. அதனால் கோபங்கொண்டு சக்கரவர்த்தி வில்லைக் கையிலேந்திப் புறப்பட்டனன். அதுகண்ட நிலமங்கை அச்சமுற்றுப் பசுவின் உருவம் பூண்டு ஓடலுற்றாள். சக்கரவர்த்தி அப் பசுவை விடாது பின்தொடர்ந்தனன்.

பூதேவியான பசு ஒருவரிடமும் அடைக்கலம்பெற முடியாது கடைசியில் பிருது சக்கரவர்த்தியையே சரண் புகநேர்ந்தது. அப்போது தேவர் முதலியவர்களிற் சிறந்தவர்கள் கன்றின் உருவங்கொண்டு வர, அந்தப் பசுவும் பால் சுரக்க, வேண்டிய பொருள்களைப் பெற்று மகிழ்வடைந்தார்கள். அவ்வாறே பூலோகத்திலுள்ள ஜீவர்களும் பயிர் பச்சை முதலியவெல்லாம் பெற்றுச் சுகமடைந்தனர்.

பிருது சக்ரவர்த்தி பிரஜைகளிடம் கொண்ட காருண்யத்தை எல்லோரும் மெச்சிக் கொண்டாடினார்கள். குடிகளும் சக்கரவர்த்தியிடம் பேரன்பு கொண்டு அவன் மனங் கோணாதபடி நடந்து வந்து அவனை மகிழ்வித்தார்கள். இததகைய அரசே சிறந்ததென்று நாம் அறிகிறோம்—இது தான் அரசனுக்கும் குடிகளுக்கும் பரஸ்பர ஒற்றுமையை விர்த்தி செய்யத்தக்கது.

இச் சக்கரவர்த்தியைக் கம்பரும், "பேதித்த வுயிரனைத்தும் பெரும் பசியால் வருந்தாமல், சோதித்தன் வரிசிலையால் நிலமடந்தை அமுதுதவச், சாதித்த பெருந்தகை" என்று உயர்த்திப் பேசியிருக்கின்றார்.

ம. இராஜ கோபால பிள்ளை,
வித்வான், சோமஸேசுவரன் பேட்டை, சென்னை.

சிறுத் தொண்டர்

(201ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் அருமைக் குழந்தை மரணத்திற்கு ஒரு சிறிது மஞ்சாமல் பேசவே, தாய் தந்தையர்கள் “ அந்தோ ! என்ன அறிவு! என்ன அறிவு!” என்றெண்ணி உருகி அவனைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கினர்.

சிராளன், அவர்களைப்பார்த்து “ஏன் இப்படிக் கலங்குகிறீர்கள்; விஷயத்தைச் சொல்லுங்கள் நடக்கவேண்டியதென்ன? சொல்லுங்கள். நான் உங்கள் விருப்பப்படி நடக்கக் காத்திருக்கிறேன்” என்றான்.

சிறுத்தொண்டர், சிராளனை அருகிலழைத்து, “உன்னுடைய புத்திசாலித் தனத்துக்கு மகிழ்ந்தேன். இன்று நமது வீட்டுக்கு ஒரு சிவனடியார் அமுதுண்ண வந்திருக்கிறார். அவர் ஆறுமாதத்திற் கொருமுறைதான் உண்பதாம். சிவனடியார்க்கு அமுது படைப்பதனாலுண்டாகும் புண்யம் பெரிது. சிவனடியார் நமது இல்லந்தேடி வந்திருப்பது பெரும்பாக்கியமாகும். அப்பா! சிராளா! ஒன்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது இச்சமயம். நீ மனம் வைத்தால்தான் இன்று இந்த அடியார் பூசை நிறைவேறும்” என்றார்.

சிராளன்—பிதா! என்னாலாகவேண்டியதைச் சொல்லுங்கள் தாமதியாமல். ஏன் மயங்கவேண்டும்? என்னிடத்திலென்ன சந்தேகமுங்களுக்கு? சிராளன் தாய்தந்தை

யர்க்கு அடங்காதவனா? அவர்கள் பேச்சைக் கேளாதவனா? அவர்களுடைய மனங்கோண நடப்பவனா?—என்றான்.

சிறுத்தொண்டர்—சீராளா, உன்னிடத்தில் இச்சமயம் நான் பரமசந்தோஷமடைகின்றேன். உனக்கு ஸகல லோகசரண்யனாகிய சிவபெருமானுடைய திருவடி நிழலில் வாழும் பெரும் பேறு கிடைக்கும். அப்பா! இன்று அமுதுக்காக வந்திருக்கும் சிவனடியார் பிள்ளைக் கறி அருந்த விரும்புகிறார்! அதற்கென்ன செய்வதென்று நானும் உன் தாயாரும் நெடுநேரம் ஆலோசித்தோம். ஒரு யோசனையும் சரிவராமையினால் உன்னை அவர்க்கு ஸமர்ப்பிக்கத் தீர்மானித்தோம். ஆனால் உன்னைப்பார்த்து உன் பேச்சைக் கேட்கும்போது எங்கள் மனம் கலங்குகிறது--என்று வேறுபேச நாவெழாமல் திகைத்தார்.

சீராளன் தந்தையின் திருமுகத்தை நோக்கி "கவலை வேண்டாம்! அப்படியேசெய்யலாம். இந்த உடல் அந்தச் சிவனடியாரின் பசிப்பிணி தீர்க்கும் உணவாவதில் நமக்கெல்லாம் பெருஞ்சுகிர்த முண்டென்பதை யறிந்தவராகிய நீங்கள் கவலைப் படுவானேன்? இந்த உடல் என்றைக்கிருந்தாலும் அழியவேண்டியது தானே? அழிந்த உடல் நாய் நரி, காக்கை, கழுகுகளுக்கு உணவாவதை நாம் காண்கிறோம். அப்படிக் கில்லாமல் மகா சிவபக்தருக்கு ஆகாரமாவதென்றால் நமது பாக்கியம் பெரிதல்லவா? தாமதிக்கவேண்டாம். சிவனடியார் பட்டினியிருப்பார். ஆதலின் விரைவில் தைரியமாய்க் காரியத்தை நடத்துங்கள்" என்றான்.

இதன் பிறகு சிறுத்தொண்டரும் அவர் மனைவியும் மனந்துணிந்தனர். அவர்கள் உலகவாழ்வின் நிலைமையை அறியாதவர்களா? அறிந்தவர்களாயினும் மாயை சற்று அவர்களை மயக்கியது. இப்பொழுது அந்த மயக்கந் தெளிந்துவிட்டபடியால் சிறுத்தொண்டர் மைந்தனைக் கையைப் பிடித்தழைத்து மனைவியின் வசம் ஒப்புவித்து, "விரைவில் காரியத்தை முடி" என்று ஆக்ஞையிட்டார்.

திருவெண்காட்டுநங்கை வேறு பதிற்பேசாமலும்

மனங் கலங்காமலும் சீராளனை அழைத்துக்கொண்டு சமையலறை சென்றாள். அந்தப் புண்யவதிக்கு இப்பொழுது, சிவனடியார் பட்டினி யிருக்கிறாரே, எங்கே ஒரு சமயம் நேரமாயிற்றென்று கோபித்துக்கொண்டு போய்விடுவாரோ என்கிற கவலை மேலிட்டது. மைந்தன் பாசம் மறைந்தது.

ஆகவே, சிவபெருமானைத் தியானித்துத் துதித்தாள். அதுகண்டு சீராளனும் துதித்தான். இருவரும் சிவமயமானார்கள். பிறகு நடக்கவேண்டியது நடந்தது.

நங்கை, சிரசு கறியமுதுக் காகாதென்று மறைத்துவிட்டு உடலைச் சமைத்தனள்; இதனுடன் வெகு பக்குவமாக வேறு கறிகளும் அன்னமும் சமைத்துக் கணவனார்க்குச் சொன்னாள்.

அவர் மிக மகிழ்ச்சியுடன் பைரவ மூர்த்தியை அழைத்துவந்து அவர் திருவடிகளை விளக்கி அந்த நீரைத் தாமும் தமது மனைவியுமாக உட்கொண்டு, ஓர் ஆசனத்தில் அவரை உட்காரவைத்து ஆராதித்துத் தொழுதார். நங்கையுந் தொழுது உடனே இலை கொண்டுவந்து போட்டுப் பரிமாறுவது எப்படியென மயங்கி நின்றாள்.

பைரவர், "அமுதுகளையெல்லாம் ஒருங்கே கொண்டுவந்து படைக்கவேண்டும்" என்றார்.

நங்கை உடனே பரிகலந்திருத்தி அவ்வாறே அமுது படைத்தாள். பைரவர் "நாம் சொல்லியவண்ணமே இறுப்புகளெல்லாம் சமைத்தீரோ?" என்று கேட்டார்.

நங்கை :—ஸ்வாமி, தலைக்கறி திருவமுதுக் காகாதென்றெண்ணி விலக்கினேம்—என்றாள்.

பைரவர் :—அஃதும் நாமுண்பதே—என்றனர்.

அப்பொழுது நாயனாரும் நங்கையும் மனம் வருந்தினர். அருகிலிருந்த தாதி "அதனையும் சமைத்துள்ளேன்; வேண்டுமானால் கொண்டுவருகிறேன்" என்றாள். உதைக் கேட்டதும் நாயனாரும் நங்கையும் மகிழ்வுற்று, "அதனைக் கொண்டுவா" என்றார்.

உடனே நங்கை போய் அதை யெடுத்துவந்து படைத்தாள். படைத்தவுடன் பைரவர், சிறுத்தொண்டரை நோக்கி, என் உடனிருந்துண்ணச் சிவனடியார் எவரையேனும் அழையும்" என்றனர்.

நாயனுர், "ஆகா! இதற்கென்ன செய்வேன்" என்று நினைத்து உடனே பைரவரை வணங்கி, "ஸ்வாமி, இதோ அழைத்து வருகிறேன், கொஞ்சம் பொறுக்க வேண்டும்" என்று வெளியேசென்று சிவனடியாருக்காக நெடுகலும் போய்த் தேடிப் பார்த்தார். ஒருவரையும் காணுமையினல், விசனத்துடன் திரும்பிவந்து பைரவரிடம் "ஸ்வாமி, நெடுகலும் தேடினேன்; இந்த வேளைக்கு அடியா ரொருவரையும் காணவில்லை. என்ன செய்வேன், ஆக்ஞைப்படி நடக்கிறேன்" என்று கரங்குவித்து நின்றார்.

பைரவர், "ஓ அப்படியா, அப்படியாயின், உம்மைப் போல் விபூதி யணிந்தவர் ஒருவரு மில்லாராதலின் நீரே எம்முடனிருந்து அமுதுண்ணும்" என்றார். ஆகா! சிறுத்தொண்டர் என்ன செய்வாரிச்சமயம்! தாம் பெற்ற பிள்ளையைத் தாமே உண்பதென்றால் அவர் மனம் எப்படியிருக்கும்? ஈசன் திருவிளையாட்டை யென்னென்பது!

பைரவர் அவ்வாறு கூறியதும் நாயனுர் சிவனற்றவர்போல் சிறிதுநேரம் நின்று "ஸ்வாமி அப்படியே" என்று உடன்பட்டார். பைரவர் அவரைத் தம்மருகில் உட்காரப்பணித்து, உட்கார்ந்ததும் நங்கையை நோக்கி வேறொரு பரிகலந்திருத்தி நமக்குப் படைத்திருப்பதிலெடுத்துப் படையுமென அவ்வாறே அந்நங்கை செய்தனள்.

படைக்கவே, நாயனுர் காமுண்ணுதிருந்தால் பைரவர் உண்ணுரென்று கருதித் தாம முதலில் உண்ணத் தொடங்கினுர். தொடங்கியது தான் தாமதம், பைரவர் சினங்கொண்டு, "நான் ஆறுமாதத்திற் கொருமுறை உண்பவன். அப்படிப்பட்ட நான் உண்பதன்முன் நீர் எப்படி உண்ண ஆரம்பித்தீர்! சே இது மரியாதையோ!

நல்லது செய்தீர் !" என்றுரைத்து "நீர் புத்திரனைப்பெற்றிருந்தால் உடனுண்ண அவனை அழையும்" என்றனர்.

நாயனர்—ஸ்வாமி, அவன் இப்போது உதவான்—என்றார்.

பைரவர், "நான் அவனுடனிருந்து தான் உண்பேன்" என்று பிடிவாதம் பிடித்தார்.

சிறுத்தொண்டர் கலங்கினர். பைரவர், "நீர்போய் உன் மகனை அழைத்துவாரும்" என்றார். சிறுத்தொண்டர் தமது மனைவியை நோக்கினர். மனைவி வெளியே சென்று சீராளா சீராளா என்று அழைத்தாள்! அழைக்கவே, சீராளன் பள்ளிக் கூடத்திலிருந்து ஓடி வருபவனைப் போல் ஓடிவந்து தாயாரைக் கட்டிக் கொண்டான்.

ஆகா ! அந்த அருந்தவப்புதல்வனையீன்ற நங்கைக்கு இச்சமயம் உண்டாயிருக்கும் சந்தோஷத்தை அளவிட முடியுமோ ?—

பெருமகிழ்ச்சியில் மூழ்கிய நங்கை சீராளனைக் கட்டியணைத்து முத்தமிட்டு இடுப்பி லெடுத்துக்கொண்டு போய் நாயகனிடம் விட்டாள். என்ன சொல்வதிந்த அதிசயத்தை ! நாயனர் மகனைக்கண்டதும் பரமானந்த பரிதராகி கண்ணை மூடிக்கொண்டு சிவபெருமானை தியானித்தார்; பிறகு கண்ணைத்திறந்து பார்க்கையில் அருகே யிருந்த பைரவரைக் காணோம். இருவரும்—இஃதென்னபாபம். எங்கே இங்கிருந்த அடியார்? என்று வியப்புற்று, எங்கும் நிறைந்தவரான நீலகண்டனைத் தியானித்துத் துதித்தனர்.

துதித்த அளவில் சிவபெருமான் விருஷபவாகனத்தில் வாமபாகத்தில் பார்வதி தேவியாருடன் காட்சி தந்தார். அந்த அரிய தரிசனங் கண்ட நாயனர், அவர் மனைவி, சீராளன் மூவரும் ஆநந்த பரவசர்களாய்த், தரையிலே விழுந்து பணிந்து எழுந்து நின்று துதித்தார்கள்; இந்தப் பாக்கியம் யாருக்குக் கிடைக்குமென்றெண்ணி மகிழ்ந்தார்கள். சிவபெருமான் அவர்கள் மூவரையும் தம்முடன் கைலாசத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றார்.

வித்வத் சாமர்த்திய வசனம்.

ஒரு சமயம் ஓர் அரசனிடத்தில் வித்வான்கள் ஸம்மானம் பெறச் சென்றிருந்தனர். அப்போது பரீக்ஷை நடந்தது. ஸமஸ்தான வித்வானாகிய சொக்கலிங்கத்தேசிகர் எல்லோரையும் கேள்விகள் கேட்டுப் பரீக்ஷித்தார். வித்வான்களெல்லாம் அவர் கேட்ட கேள்விக்குத் தக்க விடை கொடுத்துவந்தார்கள். அவர்களில் தாமலிங்கம் என்பவர் மாத்திரம் சொக்கலிங்கம் கேட்ட ஒரு சிறு கேள்விக்கு விடைசொல்லத் தெரியாமல் விழித்தார். அப்பொழுது அரசன் தலையை அசைத்துப் புன்முறுவல் செய்தான். அவனருகே யிருந்த அமைச்சர்களிலொருவர் "என்ன ஓய் தர்மலிங்கம், சொக்கலிங்கத்தினிடம் தலையைக் கொடுத்து விட்டீரே?" என்று கேட்டார். தருமலிங்கம் சிறந்த வித்வான். எத்தனையோ முறை இந்த இராஜ சபையில் ஸம்மானம் பெற்றிருக்கிறார். இன்று சொக்கலிங்கம் கேட்ட கேள்வியால் ஏதோ மறதி யேற்பட்டுவிட்டது. ஆனைக்கும் அடி சறுக்குமன்றோ?—

அமைச்சர் இப்படிக் கேட்கவே, தருமலிங்கம் 'ஆம் நான் தலையைக் கொடுத்துவிட்டேன். நீர் அவரிடம் சீக்கிரம் கத்தியைக் கொடும்" என்றார். இவ்வாறு அவர் கூறியது, நான் தலையைக் கொடுத்துவிட்டேன்; கத்தியைக் கொடுத்தால் அவர் வெட்டுவார். குற்றவாளியைத் தண்டிப்பது சகஜந் தானே என்று ஒரு பொருளும், நான் தலையைக் கொடுத்து விட்டேன், கத்திகொடுத்தால் அவர் சரைப்பார் என்று ஒரு பொருளும் பெறப்படுகின்றமையினால் இந்தப் புத்திசாலித்தனத்துக்கு அவரைப் புகழ்ந்து அரசன் அவர்க்கு வழக்கம்போல் ஸம்மானஞ் செய்தனுப்பினான். கல்விமான்கள் எந்த விதத்திலும் தப்பித்துக் கொள்வார்கள்.

18432

நற்குண முள்ளபையன்.

முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்

சற்குணன் என்னும் ஒரு பையன் ஒருநாள் தன் ஊருக்கு ஐந்து மைல் தூரத்தி லுள்ள ஒரு கிராமத்திற்குப் போக வேண்டியிருந்தது. ஆகவே அவன் தன்னுடன் ஒரு நாளைக்கு வேண்டிய ஆகாரத்தை எடுத்துக்கொண்டு கால் நடையாய்ப் புறப்பட்டுப்போனான். கொஞ்சதூரம் போனதும் ஒருசிறிய நாய்க்குட்டி அவனிடம் வாலைக் குழைத்துக்கொண்டு வந்தது. சரியான ஆகாரம் கிடைக்காமல் பட்டினியோடிருந்து அவஸ்தைப்படும் பரிதாப நிலைமையிலிருக்கிறமாதிரி அது தென்பட்டது. இருந்தாலும் முதலில் அதை அவன் கவனியாமல் போய்க் கொண்டிருந்தான். அந்த நாய்க்குட்டியும் தள்ளாடித் தள்ளாடிக்கொண்டே அவனைப் பின்தொடர்ந்தது. இதை மறுபடியும் கவனித்த சற்குணன். "ஓகோ! இதன் நிலைமை மிகவும் பரிதாபமாயிருக்கிறது! ஆயினும் என் னிடம் இருக்கும் ஆகாரத்தில் கொஞ்சம் இதற்குக் கொடுத்தால் நான் சாயங்காலம் பட்டினியோடுதான் வீடு போக வேண்டிவரும். இருந்தாலும் இந்த நாய்க்குட்டி என்னைவிட அதிகப்பசியினால் கஷ்டப்படுகிற படியால் நான் என் ஆகாரத்தில் கொஞ்சம் இதற்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே தன் ஆகாரத்தில்

கொஞ்சம் எடுத்து அதற்குப்போட்டான். நாய்க்குட்டியும் அநேகநாட்களாய் ஆகாரமே சாப்பிடாததைப்போல் மிக்க ஆவலுடன் இட்டதைப் புசித்தது.

அவ்விடம் விட்டு அந்தச் சிறுபையன் கொஞ்ச தூரம் போனுன். நாயும் அவன் கூடவே வாலையாட்டிக் கொண்டும், முன்னங்கால்களை நீட்டி நீட்டித் தாண்டிக் கொண்டும் ஓடி வந்தது. அங்கோரிடத்தில் ஒரு கிழக் குதிரை கொடிய வியாதியால் அவஸ்தைப்படுகிறமாதிரி படுத்துக்கொண்டிருந்தது. அவன் குதிரையைப்போய்ப் பார்த்தான். அது ஆகாரமே இல்லாமல் பசியினுல் களைத்து எழுந்திருக்கக்கூட முடியாமலிருந்தது. இப் பரிதாப நிலைமையைப் பார்த்த பையன் "இக்குதிரையோ அதிக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது இதற்கு நான் உதவி செய்துகொண்டிருந்தால் நான் வீடு திரும்ப அதிகநேரமாய் இருட்டிப்போய் விடும்; வழியிலோ திருடர்பயம் அதிகமென்று கேள்விப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் இதைப் பரிதாப நிலையில் விட்டுப்போக மனம் வரவில்லை. ஆகையால் என்னுல் கூடியவரையில் கஷ்டப்பட்டுப் பார்க்கிறேன். நான் இந்தக் குதிரைக்கு உதவி செய்வது பேருபகாரமாகையால் நான் செய்தே தீரவேண்டும். 'எனக்குக் கடவுள் உதவி புரிவார்" என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் தூரம்போய் புல் இருக்குமிடம் தேடி, கொஞ்சம் புல் பிடுங்கிக்கொண்டு வந்து அதற்குப்போட்டான். குதிரை பசிப்பிணியால் வருந்திக்கொண்டிருந்தமையால் அப்புல்லை வெகு ஆவலுடன் தின்றது. உடனே கொஞ்சம் ஜலமும் கொண்டுவந்து வைத்தான்; அதையும் குடித்தது.

குடித்த உடன் அதற்குக் களைதெளிந்து அநேகமுறை உடல் அசைத்துக் கொடுத்துக் கடைசியில் எழுந்து நடந்து புல்மேய ஆரம்பித்தது.

சற்குணன் அதைக்கண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டே கொஞ்சதூரம் போனவுடன் ஒரு மனிதன் அங்கொரு சேற்றுக்குட்டையிலிருந்து கரையேறத் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்த பையன் "ஐயா, ஏன் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறீர்? இந்தக் குட்டையை விட்டு வெளியே வர உமக்கு வழி தெரியவில்லையா?" என்று கேட்டான். அந்த மனிதன் "என் எஜமானே! நான் இந்தக் குட்டையில் விழுந்துவிட்டேன். எனக்கோ கண் தெரியாது. குருடன். இதைவிட்டு அங்கும் இங்கும் போனல் ஜலம் ஆழமாயிருந்து அதில் எங்கே முழுகிப்போகிறேனே என்கிற பயத்தினல் இவ்விடத்திலே அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

பையன்:—என் வேஷ்டி நனைந்து போனலும் போகிறது. உன் தடியை என்னிடமாக வீசி எறி. நான் உன்னைக் கரை ஏற்றுகிறேன் "என்ருன்.

உடனே குருடன் பையன் தொனி வந்த பக்கமாகத் தன் குச்சியை வீசி எறிந்தான். பையன் அந்தக் குச்சியை, எடுத்து ஊன்றிக் கொண்டு ஆழம் பார்த்துக்கொண்டே அதிக ஜாக்கிரதையாய்க் குட்டையில் இறங்கிப்போனன். கடைசியில் குருடனிடம் போய் அவன் கையைப் பிடித்து மெதுவாக அழைத்துக் கொண்டு கரையில் கொண்டுவந்து விட்டான். குருடன் ஐயா, எனக்கு இனி

வழி தெரியும் நான் வீடுபோய்ச் சேருகிறேன். தங்களு க்கு மிகவும் சிரமம் கொடுத்தேன். மன்னித்தருள வே ண்டும். தங்களுக்கு ஸர்வ மங்களமும் உண்டாகக்கட வது என்று வாயார வாழ்த்தினன். சிறுபையனே இரு ட்டாய்விடப் போகிறதே என்கிற பயத்தினல் அதிக விரைவாகத் தன் வழியே நடந்தான்.

கொஞ்சதூரஞ் சென்றவுடன் யுத்தத்தில் இரண்டு காலுமிழந்த ஒரு சிப்பாய் பசியால் வருந்திக் கொண்டி ருப்பதைப் பார்த்தான். சிப்பாய். "அப்பா எஜமானே! நான் அநேக யுத்தத்தில் சண்டை செய்திருக்கிறேன்: கடைசியில் நீ இப்போது பார்க்கிற நிலைமையில் எனது இரண்டு கால்களையும் இழக்க நேர்ந்தது. இப்போது ஆகாரம் பணம் ஒன்று மில்லாமல் பசியால் வருந்திக்கொ ண்டிருக்கிறேன். உன்னலான உதவி செய்தால் பேருப காரமாயிருக்குமப்பா" என்றான்.

அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு சகிக்கொ ணுத பையன் உடனே தன்னிடம் மிச்சமாயிருந்த உண வை அவனுக்குக் கொடுத்து "ஐயா, இதுதான் இப்போ து என்னிடமுள்ளது. அதிகமிருந்தால் அதிகம் கொடுப் பேன். உமக்குக் கடவுள் உதவி புரிவார்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே ஓடினன்.

கடைசியில் தான் போகவேண்டிய ஊர் போய்ச் சேர்ந்து அங்கு ஆகவேண்டிய காரியத்தை முடித்துக் கொண்டு வீடுதிரும்பித் தன்னல் கூடியவரையில் வேக மாய் வந்து கொண்டிருந்தான். அப்படி வேகமாக வந் தும் பாதி வழி வருவதற்குள் இருட்டிப் போய்விட்டது. நிலா வெளிச்சமுமில்லை. நக்ஷத்திரங்களின் வெளிச்சந்

கூடத் தெரியாமல் அதிக இருட்டாயிருந்தது. அவன் நிதானத்தின்மேல் வந்துகொண்டே யிருந்தான்: வழி தப்பி ஒரு காட்டுக்குள் போய்விட்டான்.

திக்கும் தெரியவில்லை திசையும் தெரியவில்லை. அலைந்து அலைந்து பசி மேலிட்டுக் களைத்துப்போய் மேலே போகமுடியாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து பலமாக அழத்தொடங்கினான். இப்படிக் கொஞ்சநேரம் அழுது கொண்டிருக்கும்போது இவன் காலையில் உபகாரம் செய்த நாய் வாயில் ஒரு மூட்டையைக் கௌவிக்கொண்டு இவனிடம் வாலை யாட்டியபடி வந்து நின்றது. அதைப்பார்த்த பையன் அந்தமூட்டையை வாங்கி அவிழ்த்துப் பார்த்தான். அதில் நல்ல ரொட்டிகள் இருக்கக் கண்டு சந்தோஷப்பட்டு,அவைகளைப் பசியாரத்தின்று களைதெளிந்தான். தெளிந்தவுடன் தைரியங்கொண்டு "நான் உனக்கு அற்ப ஆகாரம் கொடுத்தேன்; நீ எனக்கு விசேஷமான ஆகாரம் கொடுத்து உதவினாய்" என்று நாயைப்பார்த்துச் சொல்லி விட்டு "ஒரு நாய்க்குச் செய்த உபகாரங்கூட வீண் போகிறதில்லை" என்று மனத்தில் சந்தோஷ மடைந்தான்.

பிறகு எப்படியாவது வழியைக்கண்டு பிடித்துப் போகலாமென்று இங்குமங்கும் போய்ப் பார்த்தான் வழியோ தென்படவில்லை. காலெல்லாம் முட்கள் தைத்தன. என்ன செய்வான் பாவம்! ஒன்றும் தோன்றாதவனாய்த் தெய்வமேதுணை யென்று பிரமித்து நின்றான். ஈசன் நல்லபையனைச் சமயத்தில் கைவிடலாகா தென்று இரங்கி வெளிச்சத்தை அனுப்பினான், என்று கருத நிலாவெளிச்சம் வீசத் தொடங்கியது. அதுகண்டு

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பது வீண்போகாமல் ஈசன் உதவிபுரிந்தான் என்று நினைத்து வழிதேட நாற்புறமும் பார்த்தான். பார்த்தவளவில் அங்கு அவனெதிரில் ஒரு குதிரை மேய்ந்துகொண்டிருந்தது. அதனிடம் சென்று பார்க்கையில் அது அவன் உதவிசெய்த குதிரையாகவே இருந்தது. அது கண்டு மகிழ்ந்து "இதுவோ நான் காலையில் உபகாரம் செய்த குதிரை. இது இந்தக்காட்டிலேயே மேய்ந்து கொண்டிருக் கிறபடியால் இந்தக்காட்டில் இதற்கு வழி நன்றாய்த் தெரியும். இது இப்போது என்னைத் தன்முதுகின்மேல் ஏற்றி வைத்துக்கொண்டு இந்தக்காட்டிற்கு வெளியே கொண்டுபோய் விடாதா! பார்ப்போம், உபகாரம் செய்தது வீண்போகாது, முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையுமென்பார்களே; இதுவும் ஆண்டவன் என்விஷயத்தில் சிறிது நேரத்திற்குள்ளே நிதர்சனமாகக் காண்பித் தருளினர். இப்போதும் உதவி அவசியங் கிடைக்கும். ஈசா கருணைபுரிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டே குதிரையைக் கூப்பிட்டுத் தன்கையால் தட்டிக்கொடுத்தான். குதிரையும் இவனைத்தெரிந்து கொண்டு இவனுக்கு நன்றிபாராட்டத் தயாராயிருப்பதாகத் தெரிவிப்பதுபோல் முகத்தை இவன் பக்கம் திருப்பியது. உடனே பையன் அதன்மேல் ஏறிக்கொண்டான். குதிரையும் ஒரு தொந்தரவும் செய்யாமல் புறப்பட்டு மெதுவாகக் காட்டைத் தாண்டி நல்ல ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்தது. சிறு பையன் அதிக ஸந்தோஷப்பட்டுக் கீழே இறங்கிக் குதிரையைத் தட்டிக்கொடுத்து "நான் காலையில் இந்த அற்பப்பிராணிக்கு உதவி செய்யாதிருந்

தால் நான் நடுக்காட்டிலேயே திண்டாடிக்கொண்டுதானிருக்கவேண்டி யிருக்கும். எந்த உதவியும் வீண் போகிறதில்லை" என்று சொல்லிக்கொண்டே தன் வழி நடந்தான்.

இவனை இன்னும் தொந்தரவு விட்டபாடில்லை. இவன் கொஞ்சதூரம் சென்றவுடன் இரண்டு திருடர்கள் வந்து இவனை மறித்துக்கொண்டு இவன் இடுப்புத் துணியைப் பிடுங்க எத்தனித்தார்கள். இச்சமயத்தில் இவனுடன் வந்துகொண்டிருந்த நாய் அவர்களில் ஒருவன் காலைப் பிடித்துக் கெட்டியாகக் கடித்தது. கடித்தவுடன் அவன் பையனை விட்டுவிட்டு நாயைத் துரத்திக்கொண்டு ஓடினான். நாய் குரைத்துக்கொண்டும், ஊளையிட்டுக் கொண்டும் ஓடியது. இந்தச் சந்தர்ப்பத்தில் "யாரடா திருட்டுப்பயல்கள் அங்கே, பிடியடா பிடியடா" என்ற சத்தம் கேட்டது. கேட்டதும் மற்றொரு திருடனும் பயந்து பையனைவிட்டு ஓடிவிட்டான்.

பையன் சத்தம்வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தான். தான் காலையில் உபகாரம் செய்த சிப்பாய் குட்டையிலிருந்து கரையேற்றிய குருடன் தோளில் ஏறிக்கொண்டு வரக்கண்டான்.

சிப்பாய் பையனைப் பார்த்து "அப்பா குழந்தாய்! உனக்குக் கடவுள் கிருபை உண்டாகுக! நீ எங்களுக்குக் காலையில் செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரம் செய்ய இந்தச் சமயத்தில் வந்து உதவினோமே இதுவே எங்களுக்கு வெகு திருப்தியைத் தருகிறது. நான் ஒரு வேலியோரமாய்ப் படுத்துக்கொண்டிருந்தேன். அப்போது இருவர் ஒரு சிறு பையனை வழிமறிப்பதைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் பேச்சிலிருந்து அது நீயாகத்தா னிருக்கவேண்டுமென்று தீர்

மானித்தேன். உனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று நினைத்தேன். நான் இரண்டுகாலுமில்லாத மூடவனுன படியால் எப்படிச் செய்வதென்று வருந்தினேன். இந்தச் சமயத்தில் இவர் இவ்வழியே வந்தார். நான் இவர் தோளின்மேலேறிக்கொண்டு வழிகாட்ட இவர் நடந்து வர நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தோம். செய்த உதவி ஒருபோதும் வீண்போகாதப்பா" என்றான். பைய னும் அவர்கள் தக்க சமயத்தில் செய்த உபகாரத்திற்கு அவர்களுக்கு மனப்பூர்வமான வந்தனமளித்தான்.

பிறகு அவர்கள் எல்லாரும் சேர்ந்து பையன் வீடு போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்ததும் நடந்த சங்கதிகளைப் பையன் தன் தகப்பனுருக்கு விவரமாகச் சொன்னுன். தகப்பனுர் சந்தோஷப்பட்டு அவர்களுக்கு நல்ல சாப்பாடு போட்டுப் படுத்துக்கொள்ளப் படுக்கையும் கொடுத்து உபசரித்தார். பையன் தன் ஆயுள்கால முழுமையும் தான் செய்த உபகாரத்தையும் பிறகு தனக்கு நேர்ந்த ஆபத்துக்களையும் அப்போது தனக்கு உதவி ஏற்பட்டதையும் நினைத்து நினைத்து,

" நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்"

என்ற ஆன்றோர் வாக்கியம் பொய்க்காமல் நான் பிரத்யக்ஷத்திலேயே கண்டனுபவித்தேன். என்றும் எந்த நிமிஷத்திலும் எந்த விடத்திலும் எந்தவிதமான உபகாரஞ் செய்ய நேரிடினும் செய்யத் தவறேன். இதுவே தெய்வ சம்மதமானது" என்று மகிழ்ந்துகொண்டிருந்தான். தன் ஆயுள்பரியந்தம் தனக்கு நன்றிசெய்த நாயையும் காப்பாற்றி வந்தான்.

குழந்தைகளே! இக்கதையினுல் நாம் உபகாரம் செய்தால் அது ஒருபோதும் வீண்போகாது என்பது அறிந்துகொண்டோம். ஆகையால் நீங்கள் சமயம் நேர்ந்தவிடத்து உங்களாலான உபகாரம் செய்யத் தவறு தீர்கள். கடவுள் உங்களுக்கு உதவிபுரிவார்.

ஹாஸ்யம்

ஒரு ஸ்திரீ தன் கணவனை எப்போதும் திட்டிக் கொண்டேயிருப்பாள். அவன் என்ன நல்ல வார்த்தை சொன்னாலும், கேட்பதே யில்லை. அவன் பரமசாது வாகையினால் 'நமது தலைவிதி யிப்படி வந்து சேர்ந் திருக்கிறது' என்று சும்மா விருந்து விட்டான். இப் படி இருக்கையில் ஒருநாள் அவன் வெளியே போயி ருந்தான். அப்பொழுது கச்சேரி சேவகனொருவன் வரிப்பணம் கேட்கவந்தான். அவள்வீட்டுத் தெருக் கதவு சாத்தியிருந்தது. சேவகன் கதவைத் தடபுட லாய்த் தட்டினான். அவ்வீட்டுக்காரி தன் புருஷன்தான் வந்து கதவைத் தட்டுகிறான் என்றெண்ணிக்கொண்டு, "நீ கழிச்சலிலே போய்விட! உன்னைக் கொண்டுபோய் வைக்க! இந்நேரமென்ன? உன்னை வெளியிலே எங்கே வாரிக் கொண்டு போச்சு?" என்று திட்டிக் கொண்டே வந்தாள். சேவகன் கதவைத் தட்டுவதை நிறுத்த வில்லை. அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆகை யினால் அவள் "கதவைத் திறப்பதற்குள் உனக்கென்ன கேடு, நீ நாசமாய்ப்போக!" என்று சொல்லிக்கொண் டே கதவைப் படீரென்று திறந்தாள். திறந்ததும் சேவ கனைக்கண்டு திடுக்கிட்டாள். சேவகன், நான் வரிப்ப ணம் கேட்க வந்தால் என்னை வாயில் வந்தபடி திட்டு

கிருயா பார் உன்னை" என்று சொல்லிக்கொண்டேபோய் விட்டான்.

சேவகன் நேரேபோய் அதிகாரியிடம் தன்னை இந்த ஸ்திரீவாயில் வந்தபடி திட்டியதாகப் பிரியாது கொடுத்தான். அதிகாரி வழக்கை யெடுத்துக் கொண்டார். விசாரணையில் அந்த ஸ்தரீ "எல்லோருடைய முன்னிலையிலும், 'நான் உண்மையைச் சொல்லுகிறேன்; வந்தவன் சேவகனென்று எனக்குத் தெரியாது. என் கணவன் என்று நினைத்து நான் திட்டிவிட்டேன்?" என்று சொன்னாள். இதைக் கேட்டதும் அதிகாரியும் அங்கிருந்தவர்களும் நகைத்தார்கள். கணவன் "என் கண்ணே உன்னை மெச்சினேன்! இந்தச் சமயத்தில் உன் சுபாவமான செய்கையை மறைக்காமல் பேசினயே? அதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். நீ இத்தனை நாளாக என்னைத் திட்டியவைகளையெல்லாம் மறந்தேன். இனியாவது திட்டாமலிரு" என்று கூறினனும். இதைக் கேட்டதும் எல்லோரும் வெகு விந்தையென்று கூறி நகைத்தனர். அதிகாரி அந்த ஸ்திரீயைப் பார்த்து, "நீ இனிமேல் உன் புருஷனை அப்படித் திட்டாதே" என்று கூறி விடுதலை செய்தார். அப்பால் அந்த ஸ்திரீ தன் கணவனைத் திட்டுவதில்லை. பிறகு அவளுடைய புருஷன் அந்தச் சேவகனைக் கண்டால், என்னைப் பெருந் துன்பத்திலிருந்து விடுவித்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்" என்று சொல்லி வணங்குவதுண்டு.

Tata Printing Works, Madras.

தமிழ்நாடு அரசு ... 184332

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரு. 1 8 0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	ரு. 2 0 0
தனிச் சஞ்சிகை	விலை	ரு. 0 2 6

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக் கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப் படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத் தொகையை முன்னுடிசெலுத்தியாவது அல்லது வி.பி.யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கோள்வதால் அணா மூன்று அதிகமாய்ச்செலவாகிறபடியால்சந்தாத்தோகையை மணியார்டர் செய்வதேநலம். இது முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சோவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...	ரூபா.	5—0—0
அரைப் பக்கத்திற்கு ”	...	”	3—0—0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

புதிய தமிழ்ப் புத்தகங்கள்.

ஆஸ்திகமத உபாக்யானம் (சித்திரப்படங்களுடன்)	0	10	0
ஸ்ரீவிஷ்ணுலீலை ஷை	0	5	0
பவளத்தீவு (நாவல்)	1	8	0
வீரகேசரி ,,	1	12	0
மதனகல்யாணி மூன்று பாகமும்	4	8	0
காளிங்கராயன் கோட்டை இரண்டுபாகமும்	4	0	0
இரத்தினபுரி இரகசியம் இரண்டு பாகமும்	3	8	0
கமல வல்லி இரண்டு பாகமும்	3	8	0
இந்திராபாய்—இந்திரஜாலக்கள்ளன்	2	8	0
அமராவதி இரண்டு பாகமும்	4	0	0
பத்மாக்ஷி	2	0	0

சிவராத்திரி புராண வசனம்	1	8	0
சூத சம்ஹிதைவசனம்	1	8	0
வால்மீகி ராமாயண வசனம் பண்டித நடேச சாஸ்திரியார் உயர்ந்த பதிப்பு	15	0	0
சீகாளத்தி புராணம் மூலமும் உரையும்	2	8	0
சுப்ரமண்யர் தோத்திரக் கொத்து	0	4	0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.